**TRACK - 3**

*S.*டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை – 600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**
*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*
*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260

TAMIL

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

## சபை காலங்களின் சுருக்கம்

## RESUME OF AGES

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**“உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து”**

# சபை காலங்களின் சுருக்கம்

## RESUME OF AGES

நாம், இதுவரை ஏழு சபை காலங்களைக் குறித்த வேத வசனங்களை, ஒவ்வொரு வசனமாக எடுத்து வியாக்கியானம் செய்ததால், சபையின் தொடர்ந்து வந்த சரித்திரப்பூர்வமான செயல் எடுத்துக்காட்டமைப்பை நாம் இன்னுமாக நிலை நிறுத்தவில்லை, அதை நாம் செய்திருக்க வேண்டும். ஆகையால் இந்த அத்தியாயத்தில் தேவ ஆவியானவர் யோவானுக்கு வெளிப்படுத்தின வண்ணமாக, எபேசு சபை காலம் முதற்கொண்டு எல்லா சபைக் காலங்களினூடாக காரியங்களின் தொடர்ச்சியை தேடி ஆராய்ந்து, சபையும் அதனுடைய சரித்திரத்தையும் நாம் தொடர்ச்சியாகக் கூற முற்படுவோம். நாம் ஏற்கனவே கூறியவைகளை ஒழுங்குபடுத்திக் கூறுகிறோமேயன்றி, புதிய வரலாறுகளை இதில் சேர்க்கப் போவதில்லை.

வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும் பகுதி மிகவுமாக தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது. ஏனென்றால், இந்த புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் நோக்கிப் பேசப்படுகின்றதாக இருக்கின்ற ''சபை'' யானது, முழுவதுமாக ஒரு ''கூடிவரும் மக்கள்'' (Ekklesia) ''தெரிந்துகொள்ளப்பட்ட வர்கள்'', ''கிறிஸ்துவின் சரீரம்'', ''மணவாட்டி'' என்பவைகளைக் குறிக்காமல், மாறாக அது கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்ற மக்களாகிய முழு சரீரத்தையும் குறிக்கின்றது, அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக அல்லது பெயரளவிலுள்ள ஸ்தாபன கிறிஸ்தவர்களாயிருப்பினும் சரி என்று இந்த நண்மையான ஆராய்ச்சியின் பயனாக நாம் அறிந்து கொண்டோம், இஸ்ரவேலர் எல்லாரும் இஸ்ரவேலர் **அல்ல;** அது போன்று கிறிஸ்தவர்கள் எல்லாரும் கிறிஸ்தவர்கள் **அல்ல.** அதனால் நாம் அறிந்து கொண்டது என்னவென்றால், சபையானது, உண்மையான மற்றும் பொய்யான ஒன்றான இரண்டு திராட்சைக் கொடிகளாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதே. அந்த இரண்டு திராட்சைச் செடிகளும் இரண்டு விதமான ஆவிகளால் ஊக்குவிக்கப்படுகின்றன; ஒன்று பரிசுத்த ஆவியைக் கொண்டிருக்கின்றது.

அதே போல மற்றொன்று அந்திக் கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டு சபைகளும் தேவனை அறிவதாகவும் தேவன் அவைகளில் அன்பு கூறுகிறாரென்றும் கூறிக்கொள்கின்றன. இரண்டும் தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கூறுவதாகக் கருதுகின்றன. இரண்டும், சில அடிப்படையான சத்தியங்களை விசுவாசித்து மற்றவற்றில் வித்தியாச பேதம் காண்பிக்கின்றன. இரண்டு சபையிலுள்ள வர்களும் கர்த்தரின் நாமத்தைச் சூடிக்கொண்டு, கிறிஸ்தவர்கள் எனப் பெயர் கொண்டு, கிறிஸ்துவோடு உரிமை பாராட்டுவதால், தேவன் அவர்களை உத்திரவாதமுள்ளவர்களாகக் கருதி, இருசாரா ரோடும் பேசுகிறார்.

இவ்விரண்டும் திராட்சை செடிகளும் (சபைகளும்) ஒன்றாக், அடுத்தடுத்து வளர்ந்து, முதிர்வடைந்து, கடைசி சபையின் கால முடிவில் அறுவடை செய்யப்படும் என்பதை நாம் அறிந்து கொண்டோம். கள்ளச் சபை ஜெயங்கொண்டு உண்மையான சபையை நிர்மூலமாக்க முடியாது; அவ்விதமாகவே, உண்மையான சபையும் கள்ளச் சபையை இயேசு கிறிஸ்துவோடு இரட்சிப்பின் அனுபவத்துக்குள் கொண்டுவர முடியாது.

பரிசுத்த ஆவி மறு பிறப்பு இல்லாத கள்ள திராட்சை கொடி கிறிஸ்தவர்களின் மேலும் விழுந்து பல வித அடையாளங்கள் மற்றும் அற்புதங்களில் வல்லமையாக வெளிப்படையாகக் காணப்பெறும், நடப்பிக்கும் என்னும் வியப்புள்ள சத்தியத்தை நாம் அறிந்தோம். யூதாஸ் பிசாசு என்று அழைக்கப்பட்டாலும், பரிசுத்த ஆவியின் உறுதி செய்யப்பெற்ற (definite) ஊழியத்தைச் செய்தான் என்று வேதம் கூறிகிறது.

இவைகளை மனதில் கொண்டவர்களாய், பல்வேறு வகைப்பட்ட ஏழு காலங்களினூடாக சபையை நாம் முழுவது மாக விவரமாக நாம் காணத்துவங்கலாம்.

சபையானது பெந்தெகொஸ்தே நாளன்று பிறந்தது. முதலாம் ஆதாம் தேவனுடைய கரத்திலிருந்து ஒரு மணவாட்டியைப் பெற்றான். அவள் சிறிது காலம் கற்புள்ளவளாக ஜீவித்தாள்; அவ்விதமாக, பிந்தின ஆதாம் பெந்தெகொஸ்தேயன்று கற்புள்ள



ஆவியானவர் ஒவ்வொரு சபையின் காலத்திலும் கூறின ஆவியனாவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்னும் வார்த்தைகளை நாங்களும் கூறி ஏழு சபை காலங்களின் வியாக்கியானத்தை முடிக்கிறோம்.

நம்மிடமாக பேசிக்கொண்டிருக்கின்ற தேவ ஆவியானவர் தாமே, நமக்கு சபைக் காலங்களின் சத்தியங்களை மாத்திரமே போதித்துக் கொண்டிருக்கவில்லை, தம்மிடமாக திரும்பவிருக்கின்ற இருதயங்களிடம் உத்தமமாக இடைப்பட்டுக் கொண்டிருக்கின்றது, ஏனெனில் வார்த்தை பிரசங்கித்தலும் போதித்தலிலும் தான் ஆடு தேவனுடைய சத்தத்தை கேட்டு அவரை பின்பற்றுகிறது.

ஜனங்கள் என்னைப் பின்பற்றி என் சபையில் சேரவேண்டும் அல்லது ஒரு ஐக்கியத்தையோ, ஸ்தாபனத்தையோ ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் இந்த செய்தியை அளிக்கவில்லை. அவ்விதமாக நான் செய்ததில்லை. மேலும் இப்பொழுதும் அதை நான் செய்ய மாட்டேன். அந்த விதமான காரியங்களில் எனக்கு ஈடுபாடு கிடையாது, ஆனால் தேவன் மற்றும் மக்களைக் குறித்த காரியங்களில் எனக்கு சிரத்தை உண்டு, ஒரு காரியத்தை மாத்திரம் என்னால் செய்து முடிக்க முடியுமானால் நான் திருப்தி கொள்வேன். அந்த ஒரு காரியமானது என்னவென்றால், தேவனுக்கும் மனிதருக்கும் ஒரு ஆவிக்குரிய உறவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே அதினாலே மனிதர் கிறிஸ்துவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாகி அவருடைய ஆவியினாலே நிரப்பப்பட்டு அவருடைய வார்த்தையின்படியே ஜீவிப்பதாகும். எல்லாரும் இக்காலத்தில் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு தங்கள் ஜீவியத்தை முழுவதும் அவரிடத்தில் சமர்ப்பிக்க நான் அழைக்கிறேன்; அவ்வாறு செய்ய உங்களோடு மன்றாடுவது மாத்திரமல்ல, இங்ஙனம் செய்யாவிடில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்டாகுமென்று உங்களை எச்சரிக்கிறேன். நான் எனக்குள்ள எல்லாவற்றையும் நான் தேவனிடத் தில் சமர்ப்பித்து விட்டேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக; அவருடைய வருகை உங்கள் இருதயங்களைச் சந்தோஷத்தினால் நிரப்புவதாக.

எதிராக இருப்பதை கண்டு பிடித்து காண்பித்தால், நாம் ஏற்கெனவே பொய்யானது என்று பார்த்த அந்த வாதத்தை காட்டி சார்ந்துக் கொள்ளும்- ''எங்கள் ஊழியத்திற்கு பலன் கிடைக்கின்றது, அப்படித்தானே? நாங்கள் தேவனுலுண்டானவர்களாகத்தான் இருக்க வேண்டும்'' என்கிற வாதம்.

நாம் முடிப்பதற்கு முன்னர், இந்த கருத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன். கோதுமை மணியானது புதைக்கப்பட்டு, பிறகு அதிலிருந்து இரண்டு தளிர்கள் கிளம்பி வளர்ந்தது, அதிலிருந்து பட்டு குஞ்சமும், பின்னர் கதிரும் தோன்றியதைக் குறித்து நாம் சிந்தித்தோம். அப்படியாயின், லூதரின் காலத்திலிருந்து லூதரன்கள், 'விசுவாசத்தினுல் நீதிமானுக்கப்படுதலாகிய' போதனையை மாத்திரமே போதித்ததால், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்று நாங்கள் சொல்லுகிறோம் என நீங்கள் நினைக்கலாம். அவ்வாறே வெஸ்லி காலத்திலிருந்த மெதோடிஸ்டுகளும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லையா என்ற சந்தேகிக்க இடமுண்டு. இல்லை ஐயா, அவ்விதமாக நாங்கள் கூறுவதில்லை. நாங்கள் தனிப்பட்ட நபரையோ அல்லது ஜனங்களையோ குறித்து பேசாமல், அவர்கள் வாழந்த காலத்தைக் குறித்து பேசுகிறும். உதாரணமாக, லூத்தர் தேவனுடைய ஆவியைக் கொண்டிருந்தார், அவருடைய காலமானது ஆதியில் இருந்த விதமான ஒரு ஊற்றப் படுதலைக் கொண்டு அதனுலே உண்டாகின்ற ஒரு முழு திரும்ப அளிக்கப்படுதலின் காலம் அல்ல. அவ்வாறே வெஸ்லி, பூத், நாக்ஸ், வைட்ஃபீலட், பிராய்னுர்ட், யோனத்தான் எட்வர்ட்ஸ், முல்லர் போன்றவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தனர். ஆனுல் அவர்கள் வாழ்ந்த ஒவ்வொலு காலமும் திரும்ப அளிக்கப்படுதலின் காலம் அல்ல, வேறு எந்த சபைக் காலமும் அல்ல. ஆனுல் இந்த கடைசி காலம் தான், விசுவாச துரோகத்தினுல் இந்த காலமானது முழுவதுமாக இருட்டடிப்பு செய்யப்பட்டு கறுத்திருக்கிறது. இந்து காலமானது விசுவாசம் கைவிடப்பட்டு விசுவாச துரோகத்தின் காலமாகும், இக்காலமானது திரும்ப அளிக்கப்படுதலின் காலமாகும், இக்காலமானது நிகழ்வுகளின் சுழற்சியின் முடிவாகும். இதனுடன், எல்லாம் முடிவு பெறுகின்றது.



ஒரு மணவாட்டியைப் பெற்ருர். அவள் தனிமையாய், கற்புள்ளவளாய் சிறிது காலம் ஜீவித்தாள். ''மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத்துணியவில்லை.'' (அப். 5:13). ''இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்'' (அப் 2:47). இது எவ்வளவு காலம் நீடித்தது என்பதை நாமறியோம். ஒருநாள் ஏவாள் சாத்தானுல் சோதிக்கப்பட்டு களங்கப்படுத்தப்பட்டதுபோல், சபையும் அந்திக் கிறிஸ்துவின் ஆவி நுழைந்ததனுல் கறைபட்டது. 'வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது'' (1 யோவான் 4:3). அந்த முதலாம் சபையில் இருந்த தம்முடைய மணவாட்டியை குறித்து இயேசு ''ஆனுலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக'' (வெளி 2: 4-5) என்று கூறினுர். அந்த முதலாம் சபைக் காலத்தில் சபையானது ஏற்னெவே ஒரு ''விழுந்துபோன ஸ்திரீ''யாக இருந்தது. ஆதாம் ஏவாளை அறிவதற்கு முன்பே சாத்தான் அவளை அறிந்தான்; அவ்வாறே, 'ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு' முன்னர் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையை களங்கப்படுத்தி கெடுத்திருந்தான். அந்த விழுந்துபோகுதலை நடப்பித்த, அவள் மத்தியில் இருந்த அந்த பிரத்தியேகக் காரியம் என்னவா யிருந்தது? அது என்ன, வெளி 2:6 தான், **''அந்த நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகள்''** முதல் சபை தேவனுடைய சுத்த வசனத்தை ஏற்றுக் கொள்ளாமல் பின்வாங்கிப்போனது. சபையானது வார்த்தை நிறைவேற தேவன் பேரில் முற்றிலுமாக சார்ந்திருக்க வேண்டுமென்றும், (மானிட ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டு தேவன் தம்முடைய வார்த்தையை துவக்கம் முதல் முடிவு வரைக்கும் நிறை வேற்றத்தக்கதாக அவர் பேரில் முழுவதுமாக சார்ந்திருத்தல்) மனிதனுல் அரசாட்சி செய்யப்படக்கூடாது என்னும் தேவனுடைய நிபந்தனையை உதறித்தள்ளிவிட்டு, உலக அரசாங்கத்தைப் போன்று சபை அரசாங்கத்தை நிறுவி, மனிதர் சபையின் மேல் அதிகாரஞ் செலுத்த சம்மதித்தது. இதுதான் நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கையாகும். இஸ்ரவேல் ஜனங்கள் செய்ததையே முதல் சபையிலுள்ளவர்கள் செய்தனர். அவர்கள்

வார்த்தையையும், ஆவியானவரையும் நிராகரித்து அதற்கு பதிலாக சரியான ஒன்றைக் காட்டிலும் சூழ்நிலைக்கு இசைந்து மனித அராசாட்சி, ஆதிக்கத்துக்கு மதிப்பளித்து மனித அரசாட்சியை ஏற்படுத்தினர்.

இதன் காரணமாக, மரணம் சபையினுள் பிரவேசித்தது. நமக்கு எப்படி தெரியும்? அந்த முதலாம் சபைக் காலத்தில், தாம் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பதாக வாக்களிக்கிறார். சபையானது ஏற்கெனவே மரண விருட்சத்தை (அல்லது அந்த ஸ்தாபன கள்ள திராட்சைக் கொடி) மிக ஆழமாக தனக்குள்ளாக உட்கொண்டு ஏற்றுக்கொண்டது, அது முடிவில் அக்கினிக் கடலில் பங்கடையும். இப்பொழுது ஜீவவிருட்சத்தைச் சுடரொளி பட்டயத்தையுடைய கேரூபின்கள் காவல் காப்பதில்லை. தேவன் ஏதேன் தோட்டத்தை விட்டுப்போனதுபோல், இப்பொழுது சபை நடுவிலிருந்து புறப்பட்டுப் போவதில்லை. ஓ, இல்லை. அவர் கடைசி சபையின் காலம் வரைக்கும் தம்முடைய சபையின் மத்தியில் எப்போதும் இருந்து, எல்லாரையும் அழைக்கிறார்.

இப்பொழுது நாம் சற்று இங்கே கவனத்துடன் நோக்கு வோமாக. எபேசுவிலுள்ள சபையினுடைய தூதனுக்கு அளிக்கப் பட்ட இந்த செய்தி அங்கே எபேசுவிலிருந்த உள்ளூருக் குரிய சபைக்கான செய்தி அல்ல. அது அந்த காலத்திற்கு அளிக்கப்பட்ட செய்தி ஆகும். அந்தக் காலத்தில், கோதுமையும் களையும் பற்றிய உவமையில் கூறப்பட்ட வண்ணம், சத்தியத்தின் விதையும் மற்றும் தவறின விதையும் அந்த காலம் கொண்டிருந்தது. சபை காலங்கள் தான் வல் ஆகும், அதற்குள்ளாக கோதுமையும் களைகளும் இருக்கின்றன. கள்ளச் சபை ஸ்தாபனமுண்டாக்கிக் கொண்டு, குருக்களாட்சியை ஏற்படுத்தி, வார்த்தையை மானிட ஆதிக்கத்திற்கு உட்படுத்தி உண்மையான கிறிஸ்தவனை எதிர்க்கத் தலைப்பட்டது.

களைகள் எப்பொழுதும் கோதுமை அல்லது விளைவிக்கப் படுகின்ற எந்த ஒரு செடியைக் காட்டிலும் செழித்து வளரும். களையாகிய சபை இந்த முதலாம் சபையின் காலத்தில் துரிதமாக வளர்ந்தது. அதே சமயத்தில், கோதுமையாகிய சபையும் செழித்



அதிலிருந்து எடுத்துப் போட்டும் இருக்கிறார்கள். அவர்கள் மேலிருக்கும் வரங்களில் தேவனுடைய ஆவி வெளிப்படுவதை யாரும் மறுப்பதில்லை. ஆனால் பிலேயாமைப் போன்று அவர்கள் சொந்த திட்டங்களை வகுத்து, பணம் சேகரிப்பதற்கென முறையீடு செய்து, ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்துகின்றனர். அதே சமயத்தில் தங்களுடைய செல்வாக்கும் சம்பாத்தியத்தையும் வளர்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும் வாய்ப்புகள் ஒரு கருத்து மாறுபாடால் குறைந்து போய்விடும் என்ற பயத்தால் அவர்கள் வார்த்தை மறுதலிக்க வோ அல்லது புறக்கணிக்கவோ செய்கின்றனர். இருந்தாலும் அவர்கள் இரட்சிப்பைக் குறித்தும், பாவத்தினின்று விடுதலை யாதலைக் குறித்தும், தேவனுடைய வல்லமையைக் கொண்டு பிரசங்கிக்கின்றனர். யூதாஸைப் போன்று இவர்களுக்கும் கிறிஸ்துவினால் ஊழியம் அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் தவறான வித்தாயிருப்பதால், அதன் விளைவாக அவர்களை ஊக்கமளித்து செயல்பட வைக்கின்ற ஒரு தவறான ஆவியை கொண்டவர்களாக இருக்கின்றனர். பக்தியுள்ளவர்கள்? ஓ என்னே! அவர்கள் ஊழியத்தில் எடுக்கும் பிராயசத்திலும், அதில் காண்பிக்கும் வைராக்கியத்திலும், தெரிந்துகொள்ளப்பட்டவர் களையும் கூட மிஞ்சி விடுகின்றனர், அது லவோதிக்கேயா ஆவியாகும், அது கிறிஸ்துவினால் உண்டானதல்ல. ஏனென்றால் அது பெரிய மக்கள் கூட்டங் களையும், பெரிய திட்டங்களையும் மற்றும் தங்கள் மத்தியில் திடுக்கிடச் செய்கின்ற அடையாளங்கள் வரவேண்டுமென்றும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்துப் பிரசங்கின்றனர், ஆனால் அந்த தீர்க்கதரிசி- செய்தியாளனின் வருகையை. மறுதலிக் கின்றனர் வல்லமையாலும் அடையாளங்களாலும் மற்றும் உண்மையான வெளிப்பாட்டாலும் அவர்கள் எல்லாரையும் இந்த செய்தியாளன் மிஞ்சி ஒளி வீசினாலும் கூட மறுதலிக்கின்றனர். ஆம், ஆமாம், இந்த கடைசி நாளில் உள்ள இந்த கள்ள, பொய்யான ஆவியானது உண்மையானதைப் போலவே அதற்கு நெருக்கமாக அதே போன்று இருக்கும், வார்த்தையிலிருந்து வழி தவறி இருக்கின்ற அதன் வழிபிறழ்தலைக் கொண்டுதான் அதை வேறுபடுத்தி அடையாளம் காண முடியும், அது வார்த்தைக்கு

தேவன் சபையை சரியாக துவக்கத்தில் இருந்த பெந்தெகொஸ்தே நிலைமைக்குத் திரும்பக் கொண்டு செல்வார். நமக்கு ஏன் ஒரு திரும்ப அளிக்கப்படுதல் தேவைப்படுகின்றது என்பதை 25 வது வசனத்தில் இருப்பதை இப்பொழுது கவனியுங்கள். அந்த வெட்டுக்கிளிகளும் பச்சைப் புழுக்களும், முசுகொட்டைப் பூச்சிகளும் வேரையும் மரத்தின் சிறிது தண்டையும் தவிர மற்ற எல்லாவற்றையும் பட்சித்துப் போட்டிருந்தன. பல்வேறு கட்டங்களில் இருந்த இந்த பூச்சிகளெல்லாம் ஒன்றே ஒன்றுதான் என்று நமக்கு கூறப்பட்டிருக்கின்றது. அது சரியே. காலங்கள் தோறுமாக ஸ்தாபனத்திலும், அமைப்புகள் மற்றும் கள்ள உபதேசத்தைக் கொண்டு அவதாரம் எடுத்த அந்திக்கிறிஸ்துவின் ஆவியே இந்த பூச்சிகள் ஆகும். மிகவும் நலிவுற்ற நிலையில் இருக்கும் அந்த சிறிய வேர் மற்றும் தண்டு திரும்பவுமாக கொண்டு வரப்படப் போகின்றது. தேவன் ஒரு புதிய சபையை நடப்போவதில்லை, ஆனால் அவர் தம்முடைய மூலச் செடியை திரும்பவுமாக மூல வித்திற்கு கொண்டு வரப்போகின்றார். 23ஆம் வசனத்தில் குறிப்பிட்டிருக்கின்றபடியே அவர் போதித்தல், அல்லது ''முன்மாரி'' மழையின்படி செய்கின்றார். அடுத்ததாக அறுவடை மழை அல்லது எடுத்துக் கொள்ளப்படுதலின் விசுவாசம் வரும்.

ஆதலால் மத்தேயு 24:24ன் முழுமையான நிறைவேறுதலின் இந்த மணிப்பொழுதிலே நாம் இருக்கின்றோம். ''கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக''- தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க முயற்சி செய்வது யாராக இருக்கக்கூடும்? அது, இந்த கடைசி நாளின் ''கள்ள அபிஷேகம் பெற்றவர்களுக்குள்'' இருக்கின்ற அந்திக்கிறிஸ்துவின் ஆவியே ஆகும். இந்த கள்ள பெய்யானவர்கள் ஏற்கெனவே ''இயேசுவின் நாமத்தில்'' வந்து இந்த கடைசி நாளுக்கென தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள் தாங்கள்தான் என்று உரிமை கொண்டாடுகின்றனர். இவர்கள்தான் கள்ள மேசியாக்கள் (அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்.) இவர்கள் தீர்க்கதரிசிகள் என்று தங்களை அழைத்துக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் வார்த்தையுடன் ஒன்றியுள்ளார்களா? இல்லவே இல்லை. இவர்கள் வார்த்தையோடு கூட்டி இருக்கிறார்கள் அல்லது அல்லது



தோங்கியது. முதலாம் சபையின் கால முடிவில், நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகள் உள்ளூர் கள்ள திராட்சைக் கொடி சபைகளில் தழைத்தோங்கின. இவைகளை உண்மையான சபையிலும் பரப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதனுடைய பாதிப்பு உண்மையான சபையிலும் காணப்பட்டது. ஏனெனில் பாலிகார்ப் போன்ற பெருமதிப்புற்குரிய மனிதர் தங்களை வேதத்திற்கப்பாற்பட்ட கண்காணிப்பாளர் என்னும் பட்டத்தைக் கொண்டு தங்களை அழைத்துக் கொண்டனர். மேலும் அந்த சபை காலத்தில், உண்மையான சபையானது ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டது. விவாகமான பிறகு சில வருஷங்கள் மணவாட்டி மணவாளனுடன் காண்பிக்கும் அன்பிற்கு ஒத்ததாக இந்த ஆதி அன்பு உண்டாயிருந்தது. ஆனால் அந்த சபையின் காலத்தில், பூரண அன்பு தணிந்து, தேவனை புறக்கணித்துத் துறந்தது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சபையின் மத்தியிலே உலாவி, தம்முடைய வலது கரத்தில் செய்தியாளர்களை ஏந்திக் கொண்டிருப்பதாக வெளி 2:1 விவரிக்கிறது. ஏனெனில் இந்த மணவாட்டி விழுந்துள்ளதால் - ஏனென்றால் சபை கூட்டவையானது, உண்மையான மற்றும் தவறானதின் கூட்டுக் கலவையாக இருக்கிறது, தேவன் அதைக் கைவிடவில்லை. சபை அவருக்கே உரிமையானது. ரோமர் 14:7-9, இதை பின்வருமாறு விவரிக்கிறது, ''நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறது மில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்''. சிலுவையின் மரணத்தினால், அவர் உலகத்திலுள்ள மக்களை முழுமையாக கிரயத்துக்கு வாங்கிக் கொண்டார். அவர்கள் அவருடையவர்கள். அவர் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கிறார். (இது உரிமையைக் குறிப்பதேயன்றி, உறவைக் குறிப்பதல்ல). ஜீவனையும் மரணத்தையும் கொண்ட அந்த சரீரத்தின் நடுவில் அவர் உலாவிக் கொண்டிக்கிறார்.

முதலாம் சபையின் காலத்தில் நடப்பட்டது, இரண்டாம் காலம் மற்றும் இன்னுமாக பிற காலங்களில் படிப்படியாக வளர்ந்து கடைசி சபையின் காலத்தில் முதிர்வடைந்து அறுவடை செய்யப்படும். அவ்வாறே சிமிர்னா சபையின் காலத்தின், ஆவியானவரின் வெளிப்படுத்தல் மூலமாக அந்த சபைக் கூட்டவையின் சரித்திரத்தின் விவரமாக விளக்கப்பட்ட மற்றும் தெளிவாக்கப்பட்ட விளக்கத்தை நாம் எதிர்நோக்கி பார்க்கிறோம்.

இந்த சபையின் காலத்தில், கள்ளச் சபை உண்மையான சபையின்மேல் கொண்ட வெறுப்பு அதிகப்பட்டது. கள்ளச் சபையிலுள்ளவர்கள் உண்மையான விசுவாசிகளை விட்டுப் பிரிந்தனர் (வெளி 2:9). அவர்கள் உண்மையானவர்களை விட்டுப் பிரிந்து வெளியே சென்றனர். அவர்கள் பொய்யர், அவர்கள் யூதராயிராமல் தங்களை யூதரென்று அழைத்துக்கொண்டனர். தேவன் அவர்களை நிர்மூலமாக்கினாரா? இல்லை. ''அறுவடை யின் காலம் வரை இரண்டையும் வளரவிடுங்கள்'' என்று அவர் கூறுகிறார்.

''ஆண்டவரே, உம்முடைய ஜனங்களை அவர்கள் கொன்று போடுவதால் அவர்களை நீர் நிர்மூலமாக்க வேண்டும்'' என்று கூறினாலும்

அவர் ''அவர்களை விட்டு விடுங்கள்; ஆனால் என் மணவாட்டிக்கு நான் கூறுவதாவது, நீ மரணபரியந்தம் உண்மை யாயிரு, என்னில் இன்னும் அதிகமாக அன்பு கூருவாயாக'' என்று கூறுகிறார்.

இந்த கள்ள திராட்சைக் கொடியானது சாத்தானுடைய கொடி என்று மிகத் திட்டவட்டமாக நாம் அறிந்து கொள்கிறோம். அச்சபையிலுள்ளவர்கள் சாத்தானால் கூட்டப்படுகின்றனர். ஆனால் அவர்கள் தேவனுடைய நாமத்தில் கூடி, அவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்று பொய் சொல் கின்றனர். அவர்கள் பிரசங்கம் செய்து, போதித்து, ஞானஸ்நானம் கொடுத்து, தேவனை வழிபட்டு, கிறிஸ்து நியமித்த சபை ஒழுங்குகளில் பங்கு கொள்ளுகின்றனர்; என்றாலும், அவர்கள் தேவனால் உண்டானவர்களல்ல, ஆனால் அவர்கள் தேவனைச் சார்ந்தவர்களென்று கூறிக்கொள்வதால், தேவன் அவர்களைக்



மறுபடியும் வந்து தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே அவர்கள் எல்லாரையும் நாசம் பண்ணுவார். அவர்கள் அக்கினிக் கடலில் முடிவடைவார்கள்.

அப்படியெனில், உண்மையான வித்துக்கு சம்பவிப்ப தென்ன? நாம் ஏற்கெனவே பார்த்தபடியே அவ்விதமாகவே நடக்கும். தேவனுடைய ஜனங்கள் இக்காலத்துக்குரிய செய்தி யாளனிடமிருந்து வருகின்ற சத்திய வசனத்தினாலே ஆயத்த மாக்கப்படுகின்றனர். அவளுக்குள்ளாக பெந்தெகொஸ்தேயின் நிறைவு இருக்கும் ஏனெனில், துவக்கத்தில். அவர்கள் எவ்வித மாக இருந்தனரோ அந்நிலைமைக்கு ஆவியானவர் ஜனங்களை திரும்பக் கொண்டு வருவார். அது ''கர்த்தர் உரைக்கிறதாவது'' என்றிருக்கிறது.

அது ''கர்த்தர் உரைக்கிறதாவது'' என்பதாய் உள்ளது. ஏனென்றால் யோவேல் 2: 23-26 அதைத்தான் கூறுகின்றது, ''சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களி கூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார். களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும், நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைகிளிகளும், முசுக்கொட்டைப் பூச்சி களும், பச்சைப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை'' (யோவேல் 2:23-26). தேவன் ''திரும்ப அளிக்கப்போகின்றார்'' என்று இது கூறுகின்றது. லூத்தரின் காலம் சபையை திரும்பக் கொண்டுவரவில்லை; அது ஒரு சீர்த்திருத்தத்தை ஆரம்பித்தது. வெஸ்லியின் காலம் சபையைத் திரும்பக் கொண்டு வரவில்லை. பெந்தெகொஸ்தே காலமும் திரும்பக் கொண்டு வரவில்லை. **ஆனால் தேவன் திரும்ப அளிக்கத்தான் வேண்டும் ஏனெனில் அவரால் தம்முடைய வார்த்தையை மறுதலிக்க முடியாது.** இது சபையின் உயிர் தெழுதல் அல்ல; இது ''திரும்ப அளிக்கப்படுதல்'' என்பதாகும்.

பின் சென்றது. பட்டயத்தினுலும், பஞ்சத்தினுலும், சாவினுலும், பூமியின் துஷ்ட மிருகங்களினுலும், பூமியின் காற்பங்கிலுள்ள வர்களைக் கொலை செய்யும் படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளி 6: 1-8). யூதாஸின் ஆவி வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்பவனுக திரும்பவுமாக வந்ததை நீங்கள் கவனியுங்கள். அந்தக் குதிரை வெண்மை நிறமுள்ளதா யிருந்தது என்பதைக் கவனிக்கவும். இயேசுவிடம் யூதாஸ் மிக நெருக்கமாக இருந்தது போலவே உண்மையான சபையைப் போல அது ஏறக்குறைய மிக நெருக்கமான அளவிற்கு இருக்கிறது, அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது (வெள்ளை குதிரையின் மேல் சவாரி செய்கின்ற இவனுக்கு) எவ்விதமாக? அந்த ஆவி இப்பொழுது நிக்கொலாய் மதஸ்தரின் முறைமையின் தலைவனுக்குள் இருக்கின்றது, அத்தலைவன்தான் மூன்று கிரீடங்களை சூடிக்கொண்டு தன்னுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து கொண்டு, தன்னை கிறிஸ்தவின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி என்று அழைத்தக் கொள்கின்ற போப் பாண்டவர். கிறிஸ்துவின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி என்றுல், ''கிறிஸ்துவுக்கு ஈடாக'' அல்லது ''கிறிஸ்துவுக்கு பதிலாக'' அல்லது ''தேவனின் சார்பாக'' என்று அர்த்தங்கொள்ளும், அப்படியானுல் போப் தன்னையே பரிசுத்த ஆவி என்று அழைத்தக் கொள்கிருர், அல்லது பரிசுத்த ஆவியை புறம்பாக்கிப் போட்டு விட்டு, பரிசுத்த ஆவிக்கு பதிலாக செயலாற்றுவதாகும். அவருக்குள்ளிருக்கும் யூதாஸின் ஆவி இவ்வித கிரியைகளைச் செய்கின்றது. அவன் ஜெயிக்கிறவராகவும் ஜெயிப்பவராகவும் புறப்பட்டான் என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்து அவ்வாறு செய்யவில்லை. பிதாவினுல் ஏற்கெனவே முன் குறிக்கப் பட்டவர்கள் மாத்திரம் இயேசுவிடம் வந்தனர். யூதாஸின் ஆவி இவ்விதம் கிரியைகளை நடப்பித்துக் கொண்டே வந்து, கடைசியில் அது சரியாக ஒரு மனிதனுக்குள்ளாக அவதாரம் எடுக்கும் நாம் முன்பு கூறியவாறு, அவன், உலக சபைகளின் ஐக்கியத்தை தலைமை தாங்குவான். அவன் சேகரித்த தங்கத்தினுல் (யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்). உலக முழுதையும் ஆட்கொள்ளு வான். அந்திக்கிறிஸ்துவின் மார்க்கம் எல்லாவற்றையும் சுதந் தரித்து, எல்லாரையும் அடக்கி ஆளும். ஆனுல் இயேசு



குற்றப்படுத்துவார். ஒவ்வொரு சபையின் காலத்திலும் அவர் அவர்களைக் கடிந்துகொள்ளுகிருர். அவர்கள் பிலேயாமை நமக்கு நினைப்பூட்டுகின்றனர். பிலேயாம் ஒரு தீர்க்கதரிசியின் ஊழியத்தைக் கொண்டிருந்தான். சுத்த மிருகங்களைப் பலி செலுத்தி தேவனை அவன் அணுகமுடியும் என்று நன்கு அறிந்திருந்தான். ஆனுலும் அவன் ஒரு உண்மையான **வார்த்தை தீர்க்கதரிசி அல்ல.** பாலாக்கிடம் அவன் போகக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டிருந்தாலும், அவன் பண ஆசை கொண்டவனுய், செல்வாக்கை வாஞ்சித்து, எப்படியாயினும் பாலாக்கைக் காண முயன்ருன். ஆகையால் அவன் போக தேவன் சம்மதித்தார். அப்படியாயின் பிலேயாமின் 'இருதய வாஞ்சை' காரணமாக தேவனுடைய பரிபூரண சித்தமானது தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்திற்கு வழி விட்டது. தேவன் ''புறப்பட்டுச் செல்'' என்ருர். தேவன் தம்முடைய சிந்தையை மாற்றிக் கொண்டாரா? இல்லை, ஐயா. பிலேயாம் சென்ருலும், தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றினுர். பிலேயாம் தேவனுடைய சித்தத்தை நிறுத்தி ரத்து செய்யவில்லை. என்னவாயிருந்த போதிலும் தேவன் தம்முடைய சித்தத்தை நிறை வேற்றினுர். இதில் தோல்விக் குள்ளானவன் பிலேயாம்தான் ஏனெனில் அவன்தான் வார்த்தையை கடந்து புறக்கணித்துச் சென்ருன். இன்றைக்கும் அந்த அதே காரியத்தைத்தான் நாம் கொண்டிருக்கிறேம். பெண் பிரசங்கிகள், ஸ்தாபனம், கள்ள உபதேசம், இன்னுமாக பல காரியங்கள், மக்கள் தேவனை ஆராதித்து அவிக்குள்ளாக காரியங்களை வெளிப்படுத்திச் செய்து பிலேயாம் செய்த விதமாகவே தொடர்ந்து செய்து, சென்று கொண்டு தாங்கள் பெற்றுள்ள அந்த ஊழியமானது வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைக்கு எதிர் மாருக இருக்கின்ற போதிலும் தேவன் தங்களுடன் பேசினுர் என்று உரிமை கோருகின்றனர். தேவன் அவர்களோடு பேசினுர் என்பதை நான் மறுக்கவில்லை. அவர் பிலேயாமோடு இரண்டாம் முறை பேசினது போல் இவர்களோடு பேசுகிருர். பிலேயாம் வார்த்தைக்கு மேலாகத் தன் இருதயத்தின் வாஞ்சை நிறைவேற வேண்டும் என்று விரும்பிய போது, தேவன் அதை அவனுக்கு அருளினுர்; ஆனுலும் கடைசியில் தன் **சொந்த சித்தத்தை** அவர் நிறைவேற்றினுர்.

இன்றும்கூட அதே விதமாக தேவன் மக்களிடம் தங்கள் சொந்த இருதய வாஞ்சைகளின்படியே செய்யும்படிக்கும் கூறுகின்றுர். ஏனெனில் அவர்கள் வார்த்தையை ஏற்கெனவே புறக்கணித்து விட்டிருந்தனர். **எவ்வாருயினும் தேவனுடைய சித்தம் முடிவில் நிறைவேறும்.** ஆமென், இதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என் நம்புகிறேன். மற்றைய சபையின் காலங்களில் நடந்த சம்பவங் களைத் தெளிவாக அறிந்துகொள்ள இது உதவுவதல்லாமல், விசேஷமாக, மிக அதிகமான வரங்கள் வெளிப்படுதலும் மற்றும் வெளிப்புறம்பான ஆசீர்வாதங்களையும் கொண்டிருக்கின்ற போதிலும் இந்த முழு காலமும் தேவனுடைய ''வெளிப்படுத்தப் பட்ட வார்த்தை- சித்தத்திற்கு'' மிக அதிகமாக எதிராக இருக்கின்ற இந்த கடைசி காலத்தை குறித்து புரிந்து கொள்ள இது உதவும்.

ஒரு செய்தியை மிக உரக்கமாக, மற்றும் தெளிவாக ஒரு சபைக் காலமானது பெற்றிருக்குமானுல் இது இந்த சபைக் காலம் தான்.

சபையின் காலங்களிலெல்லாம் ''அடிமையானவளிடத்தில் பிறந்தவன் புறம்பே தள்ளப்படும் வரை சுயாதீனமுள்ள வளிடத்தில் பிறந்தவனைத் துன்பப்படுத்துவான்'' என்னும் பழைய ஏற்பாட்டின் சத்தியம் நிலைநின்றது. இச்சத்தியமானது கிறிஸ்தவனுக்கு எதிரான சாத்தானுடைய வெறுப்பும் தேவ தூஷணமும் பொய் கிறிஸ்தவர்களாகிய ஸ்தாபன மக்கள் குழுவின் மூலமாக வெளிவரும் என்றும், அந்த கள்ள திராட்சைக் கொடியை லவோதிக்கேயா காலத்தின் முடிவில் தேவன் வேரோடே பிடுங்கிப் போடும் வரைக்கும் இச்செயலானது அதிகரித்துக் கொண்டிருக்கும் என்று நாம் அறிந்து கொள்ளும் படிக்குச் செய்கின்றது.

தீர்க்கதரிசனத்தின் ஆவியால் மூன்றும் சபை காலத்தைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டது என்னவென்றுல் அந்த உலகப் பிரகாரமான சபை நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கைகளை போதகமாக ஏற்று எடுத்துக் கொள்ளும் என்பதே. வேதாகம உண்மையாகிய மூப்பர்கள் (உள்ளூர் மந்தையின் மேய்ப்பார்கள்) வார்த்தையின்படி சபையை ஆண்டு நடத்துதல் என்பதிலிருந்து,



போல இவர்களும் தங்களுக்கென சொந்த வேலிகளை அமைத்தக் கொண்டனர்.

இயேசு இவ்வுலகத்திலிருந்துபோது, யூதாஸூம் அவரோடு கூட இருந்தான். இருவரும் வித்தியாசமான ஆவிகளைப் பெற்றிருந்தனர். மரணத்திற்கு பிறகு, இருவரும் தங்களுக்குரிய ஸ்தலங்களுக்குச் சென்றனர். பின்னர் கிறிஸ்துவின் ஆவி உண்மையான சபையின் மேல் இறங்கியது; யூதாஸின் ஆவி கள்ளச் சபையின்மேல் இறங்கியது. ''ஆட்டுக்குட்டியனாவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி; நீ வந்து பார் என்று இடிமுழக்கம் போன்ற சத்தமாய்ச் சொல்லக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன்; அதன் மேல் ஏறியிருந்தவன் வில்லைப்பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனுகவும் ஜெயிப்பனுகவும் புறப்பட்டான். அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது இரண்டாம் ஜீவனுனது; நீ வந்து பார் என்று சொல்லக் கேட்டேன். அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்க தாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவர் மூன்றும் முத்திரையை உடைத்தபோது, மூன்றும் ஜீவனுனது: நீ வந்து பார் என்று சொல்லக் கேட்டேன். நான் பார்த்த போது, இதோ ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன்; அதன்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்று படி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்ச ரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன். அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனுனது; நீ வந்து பார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது இதோ மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்

லவோதிக்கேயா சபை இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆரம்பானது. இந்தக் காலத்தின் சபையானது மணவாட்டியாக பெந்தெகொஸ்தேயில் இருந்த அந்த நிலேக்குத் திரும்ப வேண்டுமாதலால், இன்றியமையாததான பேராற்றல் மிகுந்த செயல்திற வல்லமையின் (Dynamic) திரும்ப வருதலானது இருக்கும் என்பதை நாமறிவோம். விசுவாசிகள் இதை தங்கள் ஆவிகளில் உணர்ந்து முதலாம் நூற்றுண்டில் இருந்த விதமாக ஒரு புதிய ஆவியின் மழை பொழிதலுக்காக தேவனிடம் மன்றுட ஆரம்பித்தனர். அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைத்தது என்று கூறுமாப்போல், ஜனங்கள் அன்னிய பாஷை பேசி, ஆவிக்குரிய வரங்களேக் கொண்டவர்களாயினர். நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த **திரும்ப அளிக்கப்படுதல்** (Restoration) இது தான் என்று அப்பொழுது நம்பப்பட்டது. ஆனுல் அது அதுவல்ல, ஏனெனில் பின்மாரி மழையானது, வசந்த காலம் அல்லது **போதித்தலான** (Teaching) மழையாகிய முன்மாரி மழைக்குப் பின்தான் வரமுடியும் பின்மாரி மழையானது **அறுவடையின்** (Harvest) மழையாக இருக்கும் அந்த ***போதித்தலின்.*** மழையானது வராமலிருக்க அது தான் உண்மையான காரியமாக எப்படி இருக்கும்? மக்களுக்கு **போதித்து** பிள்ளேகளின் இருதயங்களே பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்க திருப்புவரான தீர்க்கதரிசி-செய்தியாளன் இன்னுமாக வரவில்லே. எடுத்தக்கொள்ளப்படுதலுக்கென அந்த இறுதியான உயிர்ப்பிக்கப்படுதல் மற்றும் திரும்ப அளிக்கப்படுதல் இதுவே என்று எண்ணப்பட்ட அது இன்னும் வரவில்லே. அந்த புதிய பொழிதலிலே, அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதம் மற்றும் பரிசுத்த ஆவிக்குள்ளாக கிரியை நடப்பித்துக் காட்டப்படுதலிலே. அநீதியாக பங்கெடுத்தலும் கலந்து கொள்ளலுமாகிய, நாங்கள் உங்களிடம் தொடர்ந்து கூறி வருகின்ற அது இருந்தது. அதற்குள்ளாக பிசாசின் வல்லமையும் இருந்தது. மனிதர் பிசாசுகளின் கட்டுக்குள்ளாக அதில் இருந்தனர், ஆனுலும் ஒருவரும் அதைக் தெளிவா அறிந்துக் கொள்ள கூடாமிலிருந்தது. மேலும் அது **உண்மையானதல்ல** என்று நிருபணமாக பார்க்க, இந்த மனிதர் (இதிலிருந்து இரண்டாவது சந்ததி தோன்றுவதற்கு முன்னதாகவே) ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டு தங்களுக்கு தேவபிராகாரமற்ற முரண்பட்ட போதகங்களே எழுதிக்கொண்டு, தங்களுக்கு முன்பு இருந்த குழுக்கள் செய்தது



தான் சபையோரிலிருந்து **குருமார்களே** பிரித்தல் என்கின்ற முறை வளர்ந்து, ''நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகள்'' என்பதற்கு சென்றடைந்தது, அதென்னவென்றுல் குருமார்கள் ஒருவர் மேல் ஒருவராக முறைவரிசைப்படியாக வகைப்படுத்திக் கொள்ளுதல். வேதத்திற்கு புறம்பான இந்த வகைப்படுத்தலானது, குருமாரை மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிடையே வைக்கின்ற குருக்களாட்சியாக படிப்படியாக உருபெற்று, குருமார்களுக்கு குறிப்பிட்ட உரிமைகளே அளித்து அதே சமயத்தில் சபையோருக்கு தேவனுல் அளிக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்டது. இச்செயல் உரிமைகள் சட்ட விரோதமாக வன்முறையாக பறித்துக்கொள்ளுதலாகும். இந்த காலத்தில் இது ஒரு போதகமாக மாறினது. இது தான் உறுதியான நம்பத்தகுந்த தேவனுடைய வார்த்தை என்று சபையில் நிலேநாட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளச் செய்யப்பட்டது, ஆனுல் உண்மையிலேயே இது தேவனுடைய வார்த்தை அல்ல என்பது திண்ணம். ஆனுல் குருமார்களோ இதை தேவனுடைய வார்த்தை என்று அறிவித்தனர். ஆகவே அந்த போதகமானது அந்தி கிறிஸ்துவாகும்.

எனவே மனித ஆளுகை என்பது முற்றிலும் முழுவது அரசியலே என்பதால், சபையும் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தது. இந்த சபையின் அரசியலில் சம்பந்தப்படுதலே ஒரு சர்வாதிகார மாமன்னன் வரவேற்று, சபை அரசியலேயும் (Church Politics), ராஜ்ய அரசியலேயும் (State Politics) ஒன்றுக இணேத்து, தன்னுடைய அதிகாரத்தையும் செயல் திறத்தையும் கொண்டு பொய்யான சபையை (சாத்தானின் கள்ள சபையை) உண்மையான மதமாக ஸ்தாபித்தான். ஆகவே பல்வேறு மன்னர்கள் மூலம் பல்வேறு அரச ஆணேகளேக் கொண்டு இந்த பொய் கள்ள சபையானது அரசாங்க அதிகாரத்தின் மூலமாக உண்மையான திராட்சைக் கொடியை இன்னும் பேரார்வமாக நிர்மூலமாக்கி வந்தது.

உண்மையான திராட்சை கொடி நிக்கொலாய் மதஸ்தரின் போதகங்களேச் சிறிதளவு பின்பற்றியது வருந்தத்தக்கது; இப்படி நான் கூறுவதன் மூலம் உண்மையான திராட்சைக் கொடி நிக்கொலாய் மதஸ்தர் கருத்துக்களே ஒரு போதகமாக கொண்டது என்று நான் கூற விழையவில்லே. அப்போதகத்திலிருந்து மிக

அப்பாற்பட்டு அது இருந்தது. ஆனால் அந்த சிறு மரணப் புழுவானது உண்மையான திராட்சைக் கொடியை, அது விழுந்து போகும் என்று எதிர்பார்த்து, அதிலிருந்து உறிஞ்சிக் கொண் டிருந்தது. உண்மையான சபையினுள், கண்காணிகளாக இருக்க தேவனால் அழைக்கப்பட்டிருந்த மனிதர், தாங்கள் கொண்டிருந்த அந்த அலுவலானது தங்கள் உள்ளூர் சபையை நடத்துவதை விட அதிகமான ஒன்று என்று எண்ணியிருந்தனர். இந்த சபையின் காலத்தில் பவுல் என்ன கூறியிருந்தானோ அதன் தெளிவான விளக்கத்தை உடையதாக சரியான புரிந்து கொள்ளுதலானது இல்லாத ஒரு கருத்து சபையில் அச்சமயத்தில் நிலவியது. ஏனெனில் பவுல் ''அவர்கள் எனக்குள்ளிருந்த தேவனை மகிமைப் படுத்தினார்கள்'' (And they glorified God in me என ஆங்கிலத்தில் உள்ளது - தமிழாக்கியோன்) என்று கூறியிருந்தான். பவுல் அதிகாரத்தை உடையவனாக இருந்த போதிலும் இந்த எல்லா அதிகாரமும் கொண்டவராக இருக்கின்ற தேவனை மக்கள் நோக்கிப் பார்க்கும்படிக்கு அவன் செய்தான். ஆனால் கண்காணிப் பாளர்களோ எப்போதுமே தெய்வீக வழிநடத்துதலோ **கூட மனித வழி** நடத்துதலையும் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர், அதினாலே கனம் தேவைப் படாதிருந்த காரியத்திற்கு அவர்கள் கனத்தை அளித்துக் கொண்டிருந்தனர், உண்மையான சபையும் மனித ஆளுகையினால் கறைப்பட்டிருந்ததை நாம் காண்கிறோம். நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கைகள் நிறுவப்பட்டு- மரபு வழியாக அப்போஸ்தலர் வருதல்- ஊழியக்காரர்கள் அமர்த்தப் படுதல்- மேய்ப்பர்கள் வாக்கு மூலம் நியமிக்கப்படுதல் போன்றவை, மேலும் கள்ள சபை அடுத்த அடி எடுத்து வைத் தால் பிலேயாம் கொள்கைக்குதான் செல்கிறது. இரண்டாவது படியான ''சாத்தானின் ஆழத்திற்கு'' செல்லும்படியாக மூழு மூச்சாக இறங்கியுள்ளது.

இந்த இரண்டாம் படியானது பிலேயாமின் போதகமாகும், (வெளி 2:14ல் விவரிக்கப்பட்டிருக்கின்றது) அதென்னவெனில் ஒரு ''ஐக்கிய கூட்டத்தின்'' மூலமாக இஸ்ரவேல் புத்திரை எவ்வாறு வழி தவறி இடறச் செய்யமுடியும் என்பதைப் பிலேயாம் பாலாக்குக்குக் கற்பித்தான். இந்தக் கூட்டத்தில் விருந்தாளிகளான, இஸ்ரவேலர் தேவனுடைய வார்த்தைக்கு



வேசி மிருகத்தின் மேல் ஏறியிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. அவள் (ரோமசபை) கடைசியான அல்லது நான்காவது சாமராஜ்யத்தின் மேல் அதிகாரம் செலுத்துகிறாள். இந்த ரோம சபை அதைச் செய்கின்றது. உலக சபைகளின் அமைப்பு இவளின் (ரோம) கீழ் இருப்பதால், மோராபுரி அதை ஆதிக்கம் செலுத்தும், உலகத்தின் தங்கம் அனைத்தும் ரோமாபுரியின் ஆதிக்கத்திலே இருப்பதால். இந்த சொருபமானது (சபைகளின் அமைப்பு) ரோமாபுரி மிகவும் கீழ்ப்படிந்து பணிந்து நடக்கும் ஆகவே உலகத்திலுள்ள மக்களனைவரும் உலக சபைகளின் ஐக்கியத்தில் சேரவேண்டும் அல்லது அவர்களுடைய தயவில் இருக்க வேண்டும். இந்த மிருகத்தின் முத்திரையைக்கையிலோ அல்லது தலையிலேயோ கொண்டிராவிடில் அவர்கள் கொள்ளவும் விற்கவும் முடியாது. இந்த முத்திரையை தலையில் கொண்டிருப்பது என்றால், திரித்துவம் மற்றும் இதர காரியங்களான உலக சபைகள் அமைப்பின் போதகத்தை அவர்கள் பின் பற்ற வேண்டும் என்பதேயாகும்; கையில் முத்திரையை கொண்டிருப்பது என்பது உலக சபையின் கருத்தை, நோக்கத்தை கைக்கொள்ள வேண்டம் என்பதே. இந்த பெரிய அதிகாரத்தைக் கொண்டு சபை அமைப்புகள் உண்மையான மணவாட்டியை உபத்திரவப் படுத்தும். இந்த சொரூபமானது மணவாட்டி பிரசங்கம் செய்வ தையும் உபதேசிப்பதையும் தடுக்க முயற்சிக்கும். அவளுடைய போதகர்கள் மக்களுக்குத் தேவையான சத்தியத்தைப் பிரசங்கித்து அவர்களை ஆறுதல் படுத்தாதபடி தடை செய்யப்படுவர். ஆனால் அந்திக் கிறிஸ்து (ஒரு மனிதனாக) இந்த உலக சபைகளின் அமைப்பை முழுவதுமாக தன் கட்டுக்குள் எடுத்துக் கொள்ளும் முன்னர், உண்மையான சபை கர்த்தருடன் இருப்பதற்காக இந்த உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும். ஆட்டுக் குட்டியான வரின் மகத்தான கலியாண விருந்திற்கென தேவன் தம்முடைய மணவாட்டியை எடுத்துக் கொள்வார்.

இந்த இறுதியான அத்தியாயத்தில், பெந்தெகொஸ்தேயி லிருந்து துவங்கிய இந்த இரண்டு சபைகள் மற்றும் இரண்டு ஆவிகள், இவைகளுடைய இறுதியான கட்டம் வரைக்கும், இவைகளுடைய நிகழ்வுகள் அடிச்சுவடுகள் ஆராயப்பட்டன, இனி வருகின்ற கடைசி விவரணத்தில் லவோதிக்கேயா காலத்தைக் குறித்து நாம் பார்ப்போம்.

பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்க தாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங் கொடுக்கப்பட்டது. அது சிறியோர், பெரியோர், ஐசுவரிய வான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையை யாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தை யாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கு செய்தது, இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமா யிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு (வெளி *13:11-18*).'' அஞ்ஞான ரோம சாமராஜ்யம்தான் பட்டயத்தால் விழுந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் அது பெயர்க் கிறிஸ்தவ ரோமசபையைச் சேர்ந்து, அஞ்ஞான வழக்கங் களையும் கிறிஸ்தவ மார்க்கத்தையும் அச்சபையில் புகுத்தி, புனித ரோம சாமராஜ்யமாகத் திகழ்ந்தபோது, சாவுக்கேதுவான அதன் காயம் சொஸ்தமாக்கப் பட்டது. இயேசு வந்து அந்த சபையை அழிக்கும் வரை அது நீடிக்கும். இப்பொழுது ரோமசபை தனியாக விடப்படவில்லை. அவள் குமாரத்திகள் அவளோடு சேர்ந்து விட்டனர். உலக சபைகளின் ஐக்கியத்தின் மூலமாக ரோமசபை முழு அதிகாரத்தையும் வகிக்கும். இது நிகழ்வதற்கு மிகவும் அரிதான, உண்மையல்லாத ஒன்று என்று சிலர் நினைக் கலாம். ஆனால் உண்மையாகவே, சரியாக இப்பொழுது சபைகள் அரசியலைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செய்வது எல்லாரும் காணும் விதத்தில் மிகவும் தெளிவாக உள்ளது இந்த ஆதிக்கமானது எவ்வளவு பெரிதான ஒன்று என்பது தக்க சமயத்தில் தெளிவாகப் புலப்படும். இந்த சபைகளின் ஐக்கியம் முடிவில் ரோமாபுரியின் தலைமையின் கீழாக சென்றடையும், இந்த ஐக்கியத்தை மக்கள் உருவாக்கின போது இது இந்த விதமாக பிற்காலத்தில் இருக்கும் என்று கற்பனை கூட செய்து பார்க்கவில்லை. ஆனாலும் அவ்விதமாக நிகழும். இப்படித்தான் அது இது இருக்கும், ஏனெனில் வெளி *17:3-6*ல் மகா பாபிலோன்



முரண்பட்ட இரண்டு காரியங்களைச் செய்வர் என்று பிலேயாம் அறிந்திருந்தான். பாலாக் தன் இராஜ்யத்தை இழந்து போகாம லிருக்க, அக்காலத்தில் ஆவிக்குரிய புகழ்பெற்ற பிலேயாமின் உதவியை நாடினான் என்பதை நீங்கள் நினைவு படுத்திக் கொள்வீர்கள். பிலேயாமின் ஆலோசனை இஸ்ரவேலரைக் கண்ணியில் வீழ்த்தி அவர்களை நிர்மூலமாக்கியது. அவனுடைய ஆலோசனை இருவகைப்பட்டது. அதில் முதலாவது, அவர்கள் ஒன்று கூடி, காரியங்களைக் கலந்தாலோசித்து ஒன்றாக உணவு சாப்பிட்டு கருத்து வேற்றுமைகளை நிவிர்த்தி செய்து நீக்குவதாகும். ஒருவரையொருவர் புரிந்து கொள்வதென்பது நீடியதான ஒன்றாகும். புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்திவிட்ட பிறகு அங்கிருந்து காரியங்களை நீங்கள் செய்யலாம். அடுத்த படி என்னவென்றால் இருவரும் ஒன்றாக ஆராதித்து வழிவடுவதாகும், ஆம் நிச்சயமாக, விருந்தளிப்போரிடமிருந்து இன்னும் சிறிது வற்புறுத்தலானது விருந்தாளிகள் தாங்கள் செய்ய நினைத்ததைக் காட்டிலும் இன்னும் அதிகமாக செய்ய வைக்கும். இது பழைய ஏற்பாட்டின் காலத்திலுண்டாயிருந்த தேவனுடைய சபைக்கு மாத்திரம் சம்பவிக்கவில்லை; புதிய ஏற்பாட்டின் காலத்திலிருந்த சபைக்கும் இது சம்பவித்தது. எப்படியென்றால் ஒரு மன்னன் ஒருவன் இருந்தான், அவன் பாலாக்கைப் போன்றே தன்னுடைய ராஜ்யத்தை ஸ்திரப்படுத்த விரும்பினான். ஆகவே கான்டஸ்டன் டைன் மன்னன் (Constantine) கிறிஸ்தவர்களையும், ரோமாபுரியின் முதல் சபையிலுள்ளவரையும் வரவழைத்தான். அதன் பலனாக கி.பி. *325*ல் நிசாயா மகாநாடு கூட்டப்பட்டது. கான்ஸ்டன்டை னுடைய அழைப்பிற்கிணங்கி, உண்மை கிறிஸ்தவர்களும், பெயர் கிறிஸ்தவர்களும் இம்மாநாட்டில் ஒன்றுகூடினர். உண்மை கிறிஸ்தவர்கள் அந்தக் கூட்டத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் உண்டாயிருக்கவில்லை. இவ்விருவரையும் ஒன்று படுத்த கான்ஸ் டன்டைன் எவ்வளவாக முயற்சித்த போதிலும், உண்மையான கிறிஸ்தவர்கள் ஒன்று சேர இணங்காமல் வெளிவந்தனர். அந்த ஐக்கியத்தில் சேர சம்மதித்தவர்களுக்கு, கான்ஸ்டன்டைன் அரசாங்க பொக்கிஷத்திலிருந்த ஐசுவரியத்தைக் கொடுத்து, அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டும் இராணுவ பலத்தைக் கொண்டும் சபையைத் தாங்கினான். ஜனங்கள் விக்கரகாராதனையும்,

மரித்தவர்களை வழிபடுவதையும் கடை பிடிக்கத் தொடங்கினர். விக்கரகங்களுக்குப் பரிசுத்தவான்களின் பெயர்கள் சூடடப்பட்டு, அவைகள் ஆலயங்களில் வைக்கப்பட்டன. ஜனங்கள் மரித்தவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அல்லது பரிசுத்தவான்களுக்கும் ஜெபம் ஏறெடுக்கக் கற்பிக்கப்பட்டனர். மனிதனுக்குக் தேவையான உணவாகிய தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாகப் பிரமாணங்களும் கொள்கைகளும், ஆசாரங்களும் கொடுக்கப்பட்டன அவைகள் கைக்கொள்ளப்பட வேண்டுமென்று அரசாங்கமும் வற்புறுத்தியது, அதற்கு மேலாக ஒரே உண்மையான தேவனின் மும்மடங்கான சொற்கூட்டு (Compound) நாமத்தைக் கொண்டு, அவர்களுக்கு மூன்று கடவுள்கள் அளிக்கப்பட்டன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலுள்ள ஞானஸ்நானம் புறக்கணிக்கப்பட்டு, இதற்குப் பதிலாக மூன்று பட்டப்பெயர்களைக் கொண்ட அஞ்ஞான ஞானஸ்நானம் கைக்கொள்ளப்பட்டது.

உண்மையான விசுவாசிகள் அங்கு சென்றிருக்கக் கூடாது அவர்கள் ஏற்கனவே பெரும்பான்மையான சத்தியத்தை இழந்து விட்டிருந்தனர். மேலும் இப்பொழுதும் கூட, அவர்கள் தேவத்துவத்தின் புரிந்து கொள்ளுதலை இழந்து போய், தண்ணீர் ஞானஸ்நானத்தில் பட்டப் பெயர்களை எடுத்துக் கொண்டு பெயர்களை இழந்து போயினர்.

இப்பொழுது இந்த பிலேயாமின் போதகத்தை மிக விழிப்புடன் கவனியுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, கவனியுங்கள் அது இந்த நேர்மையற்ற குருமார்கள் மக்களை வேண்டுமென்றே அவிசுவாசமாகிய பாவத்துக்குள்ளாக வழி நடத்தி. ஒரு ஆழ்ந்த ஆராயப்பட்ட திறமை வாய்ந்த திட்டத்தின் மூலமாக மக்களை தங்களிடமாக கட்டுப்படுத்தி இணைப்பது, நிக்கொலாய் மதஸ்தரின் போதகம் என்பது குருமார்கள் தங்களுக்குள்ளாக அரசியல் அதிகாரத்தை பெற விரும்பித்தேடி அதினால் நேர்ந்த குருமார்களின் நேர்மைற்ற அழுகிப் போன நிலையாகும். மக்களை தங்கள் வசமாக வைத்துக் கொள்ளத்தக்கதாக அவர்களை தங்களுடைய பிரமாணம் மற்றும் ஆராதனை முறைமைக்குள்ளாக கீழ்ப்படுத்துவதே பிலேயாமின் கொள்கையாகும். இப்பொழுது இதை கவனமாகப் பாருங்கள். எது மக்களை



பேழையின் வாசலைப் பூட்டிய பிறகு, நியாயத்தீர்ப்பைக் கொடுக்க தேவன் ஏழு நாட்கள் தாமதித்தார். அந்த ஏழு நாட்களில் ஒருவனாகிலும் தேவனிடத்தில் திரும்பவில்லை. நாம் வாழும் காலமும் நோவாவின் நாளை போன்றிருக்கிறது. அல்லவா?

இது அறுவடையின் காலமாயிருப்பதால், கோதுமையையும் களைகளையும் முதிர்வடையச் செய்ய அநேகர் காட்சியில் தோன்ற வேண்டியதாயிருக்கிறது. நேர்மையிழந்த அநேகரின் போதகத்தால் களைகள் அதிவேகமாக முதிர்வடைகின்றன. அவர்கள் ஜனங்களை வார்த்தையிலிருந்து அகலச் செய்கின்றனர். ஆனால் கோதுமை மணியும் கூட முதிர்வடைய வேண்டும். ஆகவே கோதுமை மணியிடம் தேவன் உறுபடுத்தப்பட்ட ஊழியத்தைக் கொண்ட ***தீர்க்கதரிசி- செய்தியாளனை*** அனுப்பு கின்றார், அதினாலே தெரிந்து கொள்ளப்பட்டவர்களால் இவர் ஏற்றுக் கொள்ளப்படுவார் என்பதினாலே முதலாம் சபை பவுலுக்கு செவி கொடுத்தது போல இவருக்கும் இவர்கள் செவிகொடுப்பார்கள், அப்பொழுது இவள் வார்த்தையில் முதிர்வடைந்து வார்த்தை மணவாட்டியாவாள் சுத்தமான வார்த்தை மற்றும் விசுவாசத்தின் பேரில் எப்பொழுதும் கவனமாயிருக்கும் இவனில் அந்த மகத்தான கிரியைகள் காணப்படும்.

கள்ளச் சபை குழுக்கள் உலக சபைகளின் ஐக்கியத்திற்குள்ளாக ஒன்று சேரும். உலக சபைகளின் ஐக்கியம் தான் **மிருகத்திற்கென்று அமைக்கப்பட்டு நிறுவப்பட்ட சொருகமாகும்.** ''பின்பு வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடைதாயிருந்து, வலுசர்ப்பத்தைப் போலப் பேசினது. அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதன் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்திய மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி பூமியின் மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம் போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று

காலமாகும். யூதர்கள் பாலஸ்தீனுவில் குடியேறியதால், இது கடைசி காலமென்பதை நாமறிவோம். அவர்கள் எவ்விதமாக அங்கு சென்றடைந்தார்கள் என்பது ஒரு பொருட்டல்ல; அவர்கள் அங்கே இருக்கின்றுர்கள் அவ்வளவுதான். இது அறுவடையின் காலம். ஆனுல் அறுவடை யாகும் முன்பு, இரண்டு திராட்சை கொடிகளும் (சபைகளும் முதிர்வடைய வேண்டும்.

லூதரின் காலம் வசந்த காலமாயிருந்தது. வெஸ்லியின் காலம் வளர்ச்சிக்கேற்ற கோடை காலமாயிருந்தது. லவோதிக் கேயா சபையின் காலமானது, கட்டப்படுவதற்கும் சுட்டெரிக்கப் படுவதற்கும் களைகள் ஒன்று சேர்க்கப்படுகின்ற; மற்றும் கர்த்தருக் கென்று கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கப்படுகின்ற அறுவடையின் காலமாகும்.

அறுவடையின் காலம். அறுவடையின் காலத்தில் செடியானது முதிர்வடைய மிக வேகமாக வளர்கிறது, ஆனுல் அடுத்த கட்டத்தில் வளர்ச்சியின் வேகம் குறைந்துபோய் வளர்ச்சியே இல்லாத ஒரு கட்டத்திற்கு வந்து விடுவதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அதைத் தான் சரியாக இப்பொழுது நாம் காண்கிறேும் அல்லவா? மக்கள் கம்யூனிஸம் மற்றும் அநேக விதமான நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்வதால் கள்ள திராட்சைக் கொடி (கள்ளச் சபை) அநேக மக்கள் திரளை இழக்கின்றது. அவளுடைய எண்ணிக்கை அதிகரிப்பதில்லை, அவ்விதமாக நாம் நம்பவேண்டும் என்று கள்ள திராட்சைக் கொடி விரும்புகிறது, ஆனுல் அவ்விதமாக இல்லை. மக்கள் மேல் அவள் கொண்டிருக் கின்ற ஆதிக்கம், செல்வாக்கு முன்பிருந்தது போல இப்பொழுது இல்லை. அநேகர் இன்றைக்கு வெளிப்புறத் தோற்றத்திற்காகவே ஆலயங்களுக்குச் செல்கின்றனர். உண்மையான திராட்சைக் கொடியைக் குறித்து என்ன? அது எப்படி இருக்கின்றது? உண்மையான சபை வளருகின்றதா? எழுப்புதல் கூட்டங்களுக்கு வந்து பீட அழைப்புகள் கொடுக்கப்படும் போது வந்து நின்று கொண்டிருக்கின்ற அந்த அநேக மக்கள் தொகை எங்கே? அவர்களில் அநேகர் உணர்ச்சி வசத்தால் மாத்திரமே வருகிறுர்கள், உண்மையான ஆவிக்குரிய தேவைக்கு பதிலாக சரீரப்பிரகாரமானதற்கு தான் வருகிறுர்கள் அல்லவா? நோவாவும் அவனுடைய குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்து, தேவன்



ஸ்தாபன சபைக்குள்ளாக கட்டி வைத்து பிறகு அவர்களை நிர்மூலமாக்கிப் போட்டது? அது சபையின் பிரமாணங்களாக மாறின போதகங்களும் கோட்பாடுகளுமே அதுதான் ரோமன் கத்தோலிக்க சபையின் போதகம். வார்த்தையாகிய உண்மையான ஆகாரம் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு கிறிஸ்தவ சொற்களினுல் சுற்றிப் போர்த்தப்பட்ட பாபிலோனிய அஞ்ஞான மார்க்கம், விக்கிரகாராதனையிலிருந்து வந்த ஆகாரம்தான் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அந்த அதே விதமான ஆவி மற்றும் போதகமும் சரியாக எல்லா பிராடெஸ் டென்டுகள் மத்தியில் இருக்கின்றது அது **ஸ்தாபனம்** என்றழைக் கப்படுகின்றது. நிக்கொலாய் மதஸ்தர் கொள்கை என்பது சபையை நிர்மாணித்து ஸ்தாபித்து சபையின் வழிநடத்துதலை மனித ஆளுகைக்குள்ளாக கொண்டு வந்து, அதினுல் ஆவியானவரை உயர் நிலையிலிருந்து வெளியே நீக்கி தள்ளுவது என்பதே. பிலேயாமின் போதகம் என்பது வேதாகமத்துக்கு பதிலாக சபையின் கையேடை (manual) உபயோகிக்கும் ஸ்தாபனக் கொள்கைச் செயலாகும். மேலும் சரியாக இம்மணிநேரம் வரைக்கும், அநேக தேவனுடைய மக்கள் ஸ்தாபனக் கொள்கை என்னும் கண்ணியில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். தேவன் அவர்களை நோக்கி, ''என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதை களில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்'' என்று கூக்குரலிடுகிறுர். அவர்கள் சத்தியத்தை அறியாதவர்களாயிருக்கின்றனர் என்பதை நீங்கள் காணலாம். ஆனுல் எடுத்துக் கொள்ளப்படுதல் இந்த கணநேரத்தில் சம்பவிக்குமானுல், தேவனுடைய நியாயத் தீர்ப்பில் நிற்கும் போது தவறுன கூட்டத்தாருடன் இருந்ததற்காக இந்த அறியாமை என்னும் முறையீடு இவர்களை தப்புவிக்காது.

குருமார்கள் தங்களை ஒருவருக்கு மேல் ஒருவர் என்ற பதவியைக்கொண்டு, முடிவில் ஒரு தலைவரால் ஆளப்படுவது போன்று தங்களை ஒரு ஒழுங்கு முறையான அமைப்பு முறை போல நிறுவிக் கொள்வார்களானுல் இது எவ்வளவு அற்புதமான தாகவும் அத்தியாவசமான ஒன்றுக இருந்தாலும் சரி. அது அந்தி கிறிஸ்து ஆவியின் வெளிப்படுதலேயாகும், அது வார்த்தையின்

இடத்தை மனித யோசனை எடுத்துக் கொவதே ஆகும். நிர்மாணிக்கப்பட்ட ஸ்தாபனங்களில் இருக்கின்ற எந்த ஒரு மனிதனும் சரியாக அந்தி கிறிஸ்துவின் ஒழுங்கு முறையின் மத்தியில் இருக்கின்றான். இப்பொழுது நான் இதை கூறி காரியத்தை தெளிவாக்கட்டும். நான் மக்களுக்கு எதிராக இல்லாமல். **அந்த ஸ்தாபன ஒழுங்கு முறைக்கு எதிராக மட்டுமே இருக்கின்றேன்.**

சபையும் அரசாங்கமும் ஒன்றுபட்ட பின்னர், இருளின் காலங்கள் தோன்றுவதற்கு அவசியமான அனைத்தும் தயாராகி விட்டன. ஆயிர வருஷ காலமாக சபையானது அந்த காரத்தின் ஆழத்துக்குள் சென்று சாத்தானின் ஆழங்களில் அறிந்து மூழ்கி இருந்தது. பக்தியான மக்கள் யாராயிருந்தாலும் நிக்கொலாய் தாஸ்தர் கொள்கை மற்றும் பிலேயாம் போதகம் ஆகிய இரண்டையும் ஏற்று தழுவிக்கொண்டு அரசியல் அதிகாரத்தைக் கொண்டு பொருளாதார மற்றும் ஆள் பலம் தங்களுக்க ஆதரவாக கொண்டிருப்பார்களானால் அவர்கள் செல்லக் கூடிய ஒரேயொரு திசைதான் உண்டு. அந்த திசையானது நேராக அவர்களை யேசபேல் போதகத்துக்க கொண்டு செல்கிறது. இப்பொழுது நாம் ஏன் இதைக் குறிப்பிடுகிறோம்? நான்காம் சபையின் காலத்தைக் குறித்து சிந்திக்கும்போது, யேசபேல் என்பவள் அஸ்தரோத்தின் ஆசாரியனும், சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தியென்று நாம் கூறினோம். ஏத்பாகால் என்பவன் ஒரு கொலைக்காரன். யேசபேல் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை அரசியல் காரணங்கொண்டு மணந்தாள். அவள் மக்களுடைய மதத்தை தன் ஆளுகைக்குள் எடுத்துக் கொண்டு லேவியர்களைக் கொலை செய்து, அஸ்தரோத்துக்கும் (வீனஸ்), பாகாலுக்கும் (சூரிய தேவன்) ஆலயங்களை எழுப்பி, மக்கள் இத்தெயங்களை வழிபடவேண்டுமென்று வற்புறுத்தினாள். அவள் ஒரு போதகத்தை உருவாக்கி, அதைக் கட்டாய முறையில் ஆசாரியர்கள் அதை போதிக்கும் படிக்குச் செய்தாள், அவர்கள் அதைக் கொண்டு மக்கள் அதை ஏற்றுக் கொள்ளும்படிக்குச் செய்தனர். இருளின் காலங்களில் பெயர் கிறிஸ்தவ சபை எவ்வாறிருந்தது என்பதை நாம் இப்போது அறியலாம். தேவனுடைய நாமங்கள் மற்றும் பட்டங்கள் இன்னும் சில



மற்றும் மரணம் ஆகும். கள்ள திராட்சைக் கொடி தன்னுடைய செல்வாக்கான நாளிலே உண்மையான திராட்சைக் கொடியை முற்றிலுமாகக் கொன்று போட முடியவில்லை, அதே விதமாக உண்மையான திராட்சைக் கொடியும் கள்ள திராட்சைக் கொடியை இயேசு கிறிஸ்துவிடமாகத் திரும்பவும் கொண்டு வர முடியவில்லை. ஆனால் அந்த கள்ள திராட்சைக் கொடி தன்னை அரணிட்டு உறுதியாக நிறுவிக் கொண்டு, கடைசி சபை காலத்தின் கடைசி பகுதிக்காக காத்துக்கொண்டிருந்தது, அதில் தெரிந்து கொள்ளப்பட்ட, உண்மையான தேவனுடைய திராட்சைக் கொடியாகிய அந்த சிறு மந்தையைத் தவிர மற்ற எல்லாரையும் தன் பக்கம் இழுத்துக் கொள்ள காத்துக் கொண்டிருந்தது.

காலங்கள்தோறும் உண்டான தேவனுடைய மகத்தான அசைவுகள் (அவைகள் அநேகமாயிருந்தன) நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கைகளை ஒழிக்காமலிருந்தது வருந்தத்தக்கது, இந்த அசைவுகளின் காரணமாக சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர், எல்லாரும் ஸ்தாபித்துக்கொண்டு மரித்துப்போயினர். பிறகு அவர்கள் ஸ்தாபனங்களுக்குள்ளாக ஆகாரமில்லாத, புல் இல்லாத புல்வெளிகளுக்கு சென்று ஆவிக்கரிய விதமான மரித்தவர்களுடன் சேர்ந்து கொண்டனர். அதைக் குறித்த சிறிய காரியத்தை மட்டும் அறிந்திருந்தனர், ஆனால் ஒவ்வொரு குழுவும் அதே தவறால்தான் கறைப்பட்டிருந்தனர், எழுப்புதலின் அக்கினி மங்கி எரிந்தபோது, ஸ்தாபனம் அதைக் கைப்பற்றி தன் கட்டுக்குள் கொண்டு வந்தது, மக்கள் ஸ்தாபனத்திற்குள்ளாக சென்று மாறினர். இவர்கள் பெயர் கிறிஸ்தவர்களாக மாத்திரமே இருந்தனர். ஆனாலும் ஒவ்வொரு குழுவும் ரோமன் கத்தோலிக்க சபையைப் போன்று, இவர்கள் தாங்கள் செய்தவைனத்தும் சரியென்றும் மற்றவர்கள் எல்லாம் தவறு என்று எண்ணி யிருந்தனர். கடைசி காலத்தில் குமாரத்திகள் தாய் கோழியின் கீழ், ரோமாபுரிக்கு, தங்களுடைய வீட்டிற்கு திரும்பிச் செல்லத்தக்க தாக சகலமும் இச்சபையின் காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டன.

இப்பொழுது நாம் வாழும் கடைசி காலமாகிய லவோதிக் கேயா சபையின் காலத்திற்கு வருவோம். இது நம்முடைய

கோதுமை மணியானது, இருளின் காலங்களில் அழுகிக் கிடந்த இந்த கோதுமை மணியானது இந்த சபை காலத்தில் ஒரு தளிரை வெளியே வளரவிட்டு, வருங்காலத்தைச் சார்ந்த ஒரு நாளில், லவோதிக்கேயா சபைக் கால முடிவில், இயேசு வருவதற்கு சற்று முன்னர், சபையானது மறுபடியுமாக ஒரு கோதுமை மணி மணவாட்டியாக ஆகத்தக்கதாக திரும்பிச் செல்லும் என்றும் களைகள் அறுவடை செய்யப்பட்டு அக்கினிக் கடலில் சுட்டெரிக்கப்படும் என்று அடையாளமாக அமைந்து தெரியப் படுத்துகின்றது.

ஐந்தாம் சபையின் காலத்தில் தேவனுடைய வார்த்தை அச்சடிக்கப்பட்டு, மக்களிடையே அதிகமாக பரவியது. இதன் பலன் ஆறும் சபையின் காலத்தில் காணப்பட்டது. இச்சபைக் காலமானது திரும்ப அளிக்கப்படுதலின் இரண்டாம் கட்டமாக இருந்து நாம் முன்னதாக குறிப்பிட்டபடியே இது பட்டுக் குஞ்ச காலமாக (tassel age) இருந்தது. கல்வி இக்காலத்தில் செழித்தோங்கியது. தேவனை நேசித்து அவருக்கு சேவை செய்து அறிவுத்திறம் வாய்ந்த மனிதரின் காலமாக இது இருந்தது. மிஷனரிமார்கள் மிகவுமாக அதிகரித்து வார்த்தை உலகம் முழுவதுமாக பரவிச் சென்றது. சகோதர சிநேகத்தின் காலமாக இது இருந்தது. இது திறந்த வாசலின் காலமாயிருந்தது. அதிகமாக நீடித்த கடைசி காலம் இதுவே. இதற்குப் பிறகு தோன்றும் லவோதிக்கேயா சபையின் காலம் மிகவும் குறுகியதாயிருக்கும்.

மற்றெல்லாச் சபையின் காலங்களைக் காட்டிலும் ஆறும் சபையின் காலத்தின் உண்மையான சபை உண்மையான திராட்சைக் கொடி அதிகமாக தழைத்தோங்கியது. உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்த விசுவாசிகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது இந்த சபைக் காலமானது பரிசுத்த மனிதரை முன்னணியில் கொண்டு வந்தது. உண்மையான திராட்சைக் கொடி பரவினது. கள்ளச் சபையின் செல்வாக்கு சிறிது சிறிதாக குறைவுபடத் தொடங்கியது. உண்மையான திராட்சைக்கொடி, சபை, எங்கெல்லாம் சென்றதோ அங்கே தேவன் வெளிச்சத் தையும், ஜீவனையும், சந்தோஷத்தையும் அளித்தார். கள்ள திராட்சைக் கொடி என்னவாயிருந்தது என்பது அம்பலமாக்கப் பட்டது: அது இருள், துயரம், இழிந்த தன்மை, அறியாமை



ஆவிக்குரிய கொள்கைகள் தவிர, தேவனுடைய வார்த்தையை முழுவதுமாக அவர்கள் விட்டு விட்டனர். அவர்கள் வேதத்திலிருந்து எதை எடுத்தார்களோ அதன் அர்த்தத்தை மாற்றி உண்மைக்கு மாறாக திரித்துப்போட்டார்கள். அவர்களின் பிஷப் குழுக்கள் மற்றும் ஏனையோர் பெரிய பெரிய ஆய்வு கட்டுரைகளை எழுதினர். போப்புகள் தங்களைப் பிழையற்றவர்கள் என்று கூறிக்கொண்டு, தேவனிடத்திலிருந்து வெளிப்பாட்டைப் பெற்றதாக கூறி அதே தேவன் மக்களிடம் பேசுவது போல பேசினர். அவர்கள் தங்கள் போதங்களை குருமார்களுக்குப் போதித்தனர்; குமார்கள் மக்களைப் பயமுறுத்தி இவைகளை விசுவாசிக்கும்படி செய்தனர். கருத்து வேற்றுமை கொண்ட எவரும் கொல்லப்பட்டனர். இல்லையேல் சபை பிரஷ்டம், நீக்கம் செய்யப்பட்டனர், அது மரணத்தை விட மோசமானதாக இருந்திருக்கலாம். சபை மக்களின் மேல் முழுவதும் ஆதிக்கம் செலுத்தி உண்மையான கிறிஸ்தவர்களை நிர்மூலமாக்க வேண்டுமென்று கருதி, அரசியல் அதிகாரம் கொண்டு காட்டு மிராண்டித் தனமாக அவர்களின் இரத்தத்தைக் குடித்தது. இவர்களில் பெரும்பாலோர் கொல்லப் பட்டதால், வார்த்தையும், பரிசுத்த ஆவியின் கிரியைகளும் ஆழிந்து போகுமென்று ஐயமேற்பட்டது. ஆனால் உண்மையான சபை திராட்சை கொடி போராடிப் பிழைத்தது. தேவன் தம்முடைய சிறுமந்தையைப் பாதுகாத்ததன் காரணமாக, ரோம சபை அவர்களின் உடல்களை அழித்தாலும், அவர்களுக் குள்ளிருந்த ஆவியை அழிக்க முடியவில்லை. பரிசுத்த ஆவி மற்றும் வல்லமையின் ஆதரவுடன் சத்தியத்தின் ஒளியானது பிரகாசித்து ஒளி வீசினது.

இந்தப் பகுதி ஒரு தெளிவுமிக்க ஒன்று கண்டுணர ஒரு சிறந்த பகுதியாகும். கவனியுங்கள். நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளும் போதகங்களும், பிலேயாமின் போதகமும் மற்றும் கள்ள தீர்க்கதரிசினியான யேசபேலின் மற்றும் கள்ள தீர்க்கதரிசினியான யேசபேலின் போதகமும் மூன்று ஆவிகளாக அமையவில்லை அல்லது மூன்று ஆவிக்குரிய கொள்கைகளை உருவாக்கவில்லை. இவைகள் மூன்று தான். ஆனால் ஆழத்தை விட்டு ஆழம் செல்கின்ற அதே ஆவியின் பலவித கிரியை வெளி தோன்றுதலாகும். அதன் முழு காரியம் என்னவென்றால்

ஸ்தாபனத்தின் அந்திக் **கிறிஸ்துவின்** ஆவி அதனுடைய மூன்று பல்வேறு கட்டங்களில் காணப்படுவதாகும். ஸ்தாபனங்கள் உண்டாகக் காரணமாயிருந்த அந்திக்கிறிஸ்துவின் ஆவியின் தன்மைகள் மூன்று வித்தியாசமான கட்டங்களில் காணப்படு கின்றன. குருமார்கள் தங்களைச் சபையோரிடமிருந்து பிரித்துக் கொண்டு குருக்களாட்சியை ஏற்படுத்தியவுடன், அவர்கள் ஜனங்களை ஸ்தாபனங்களுக்குள் வழி நடத்தி அதனுடன் கட்டிப் போட்டு அவர்களை அடக்கி ஆண்டனர். இந்த ஸ்தாபனமானது சுத்தமான தேவனுடைய வார்த்தைக்கு பதிலாக ஜனங்களுக்கு அவர்கள் கற்றுக்கொடுத்த போதனைகள் மற்றும் பிரமாணங்களின் மேல் தான் இது அமைக்கப்பட்டிருந்தது. சடங்கு மற்றும் சடங்குகள் நிறைந்த முறைமைகளுக்கு ஆராதனையில் அதிக பங்கு அளிக்கப்பட்டது, விரைவிலேயே இந்த முழு அமைப்பானது தீவிரவாத மற்றும் மிகவும் பேய்த்தனமான, கொடூரமான வல்லமையானது, ஒரு பக்தி சொற்பொழிவின் மூலமாகவோ அல்லது துல்லியமான பலத்தின் மூலமாகவோ அது சிறந்த விதத்தில் கட்டுப்படுத்த ஆரம்பித்தது. அது தன்னுடைய வீரியத்தை தன்னுடைய சொந்த கள்ளத்தீர்க்கதரிசனங்களின் மூலமாக பெற்றதேயல்லாமல் தேவனுடைய வார்த்தையி லிருந்து பெறவில்லை. அது கிறிஸ்துவின் நாமத்திலே வந்தாலும் அது முற்றிலுமாக அந்தி கிறிஸ்துவாக இருந்தது.

இச்சூழ்நிலையானது முடிவுறுத ஒன்றாக, இதனால் **சத்தியமானது** நிச்சயமாக மரித்துத்தான் ஆகவேண்டும் என்கின்ற ஒரு நிலையானது காணப்பட்ட பிறகு, ரோமன் கத்தோலிக்க சபையின் மிகவும் மோசமான, கீழ்த்தரமான செய்கைகளை மனிதர் எதிர்த்து கண்டனக் குரலெழுப்ப ஆரம்பித்தனர், ஏனெனில் இந்த விதமான போதகத்தில், மற்றும் இந்த விதமான நடத்தையில் தேவன் இருக்கிறார் என்பது கற்பனை கூட செய்து பார்க்க முடியாத ஒன்றாகும். இந்த எதிர்ப்புகள் அசட்டை செய்யப்பட்டு, கவனத்தை ஈர்க்க முடியாமல் அடங்கிப் போனது அல்லது ரோம சபையினால் அடக்கிப்போடப்பட்டது. அப்பொழுது தேவன் தம்முடைய சுயாதிபத்திய கிருபையினால். சீர்திருத்தம் உண்டாக்க மார்டின் லூதர் என்னும் செய்தியாளனை அனுப்பினார். ரோமன் கத்தோலிக்க சபை தன் செயல்களை மிக அதிக அளவில்



செய்து தன் அழிவைத் தன் **செயல்**களாலே தேடிக் கொள்கின்ற அளவுக்கு இருந்த ஒரு சூழ்நிலையில் மார்ட்டின் லூத்தர் செயல் பட்டார். ஆதலால் 'விசுவாசித்தினால் நீதிமானாக்கப்படுதலைக்' குறித்து லூதர் பிரசங்கித்தபோது, உண்மையான சபை உண்மை யான திராட்சைக் கொடியானது அநேக நூற்றாண்டு களுக்கு பிறகு முதன் முதலாக அதிகம் செழித்துவளர ஆரம்பித்தது, பெயர் கிறிஸ்தவ சபை அரசாங்க அதிகாரத்தைப் பெற்றிருந்ததால், அரசாங்கம் உண்மையான விசுவாசிகளை எதிர்க்கத் தொடங்கியது. இங்குதான் லூதரும், உண்மையான விசுவாசிகளும் தவறு செய்தனர். உண்மையான சபைக்கு அரசாங்கம் பொருளுதவி செய்ய அவர்கள் சம்மதித்தனர். ஆகவே இதன் விளைவாக இந்த சபைக் காலமானது வார்த்தையின் பேரில் அதிகளவில் எடுத்துரைக்க செயலில் இறங்கவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவிற்காவது வார்த்தையில் வந்ததே அதற்காக தேவனுக்கு நன்றி, ஆகவே பெருமளவில் இச்சபை அரசியல் வல்லமையின் பேரில் சார்ந்திருந்ததால், முடிவில் ஒரு ஸ்தாபனமாக மாறியது, லூத்தரின் சந்ததியில் இருந்த இதே குழு, கள்ள திராட்சை கொடியிலிருந்து உடைந்து பிரிந்து வந்த இதே குழு அந்த வேசியின் குமாரத்தியாக மாறுவதற்காக திரும்பி, இச்சபை யானது நேராக நிக்கொலாய் மதஸ்தரின் போதகத்திற்குள்ளா கவும், பிலேயாமின் போதகத்திற்குள்ளாகவும் சென்றது. இந்த காலத்தில் அநேக எண்ணிக்கையில் இவர்களுக்குள்ளாக கோஷ்டிப்பிரிவுகள் இருந்தன, இவர்கள் உண்மையான விதத்தி லிருந்து எவ்வளவாக அப்பாற்பட்டிருந்தனர் என்பதன் நிருபணத் திற்கு, எவ்வளவு ஒருவரையொருவர் துன்புறுத்தி சில காரியங் களில் கொலை கூட செய்தனர் என்பதை வரலாற்றை வாசித்தாலே தெரிந்து கொள்ளலாம். ஆனாலும் ஒவ்வொரு சபை காலத்தி லிருந்தது போன்று, இந்த காலத்திலும் இவர்கள் மத்தியில் சிலபேர் உண்மையான வித்துகளாயிருந்தனர்.

இந்த சபைக் காலத்தில் இந்த ஒரு காரியத்திற்கு நாம் மகிழ்ச்சியுறுகிறோம். சீர்திருத்தம் இச்சபையின் காலத்தில் தொடங்கியது. இது சபையின் உயிர்த்தெழுதல் அல்ல. ஆனால் ஒரு சீர்திருத்தம் மட்டுமே. இது ஒரு திரும்ப அளிக்கப்படுதல் என்பதும் அல்ல. ஆனால் நிசாயாவில் மரித்துப் போயிருந்த அந்த